செ.வெ.எண் :06 நாள் : 02.03.2021

# சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021
# கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தேர்தல் விழிப்புணர்வு அதிநவீன மின்னணு வீடியோ விளம்பர வாகனத்தை துவக்கி வைத்தார்.

---

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று (02.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அதிநவீன மின்னணு வீடியோ விளம்பர வாகனத்தின் மூலம் தேர்தல் விழிப்புணர்வு குறித்த குறும்படங்களை பார்வையிட்டு, துவக்கி வைத்தார்.

**மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது:**

தமிழகத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021 நடைபெறுவதை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2021-ல் பொதுமக்கள் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அதிநவீன மின்னணு வீடியோ விளம்பர வாகனத்தின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பல்வேறு விழிப்புணர்வு குறும்படங்கள் ஒளிபரப்பப்பட உள்ளது.

மேலும், பொதுமக்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்துவது குறித்த குறும்படம், மாற்றுத்திறனாளிகள், மகளிர் மற்றும் முதியோர் ஆகியோர்களுக்கான வாக்குச்சாவடி மையங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் குறித்த குறும்படங்கள், இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் ஏ.ஆர்.ரகுமான், பிரபுதேவா, ரோபோசங்கர் போன்ற பிரபலங்களின் விழிப்புணர்வு குறும்படங்கள் என 32 குறும்படங்கள் ஒளிபரப்பப்பட உள்ளது.

எனவே, பொதுமக்கள் தேர்தல் தொடர்பான குறும்படங்களை கண்டு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 100 சதவிகிதம் வாக்குப்பதிவினை உறுதிப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.தே.ராம்குமார், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.த.ஜெ.ராஜாபிரகாஷ், வட்டாட்சியர் (தேர்தல்) திரு.ஜி.ஜெய்சங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.